# பாடம் 38: திருநிலைகள் (குருக்கள்)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

அடிப்படை நிலை (9 வயது) : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (12 வயது) : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (15 வயது) : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
நாம் திருநிலைகள் அருளடையாளம் குறித்து கற்கத் தொடங்கியுள்ளோம். இறைமக்களுக்குப் பணி செய்வதற்காக திருப்பணி குருத்துவத்தின் பகுதியாக அழைக்கப்படும் ஆண்களே திருநிலைகளுக்குள் ஏற்கப்படுவதை நாம் கற்றுள்ளோம். திருச்சபையில் திருத்தொண்டர்களின் வகிநிலை குறித்தும் நாம் கற்றுள்ளோம். இந்த பாடத்தில், குருக்கள் குறித்து நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. திருச்சபைக்காக குருக்கள் ஆகுமாறு அழைக்கப்பட்ட ஆண்கள் குறித்தச் சுட்டல்களை புதிய ஏற்பாடு கொண்டுள்ளது.

*தீத்து 1:5-6*: ‘‘நான் உனக்குப் பணித்தபடியே, ஒவ்வொரு பட்டணத்திலும் மூப்பர்களை (*ப்ரஸ்பித்தேருஸ்*) நியமித்திடு. அவர்கள் பழிச்சொல்லுக்கு ஆளாகாத, ஒரு மனைவியைக் கொண்டவராக, நம்பிக்கை கொண்ட பிள்ளைகளை உடைய ஆணாக இருக்கட்டும்.’’

*1 திமொத்தேயு 5:17*: ‘‘சபையை நடத்தும் மூப்பர்கள் (*ப்ரஸ்பித்தேருஸ்*) இரட்டை மாண்புக்குத் தகுந்தவர்களாகவும், சிறப்பாக வார்த்தையை அறிவிப்பதிலும் கற்பிப்பதிலும் கடும் உழைப்பாளர்களாகவும் இருக்கட்டும்.’’

2. *கதிம 1562*: ‘‘‘தந்தையால் திருநிலைப்படுத்தப் பெற்று உலகிற்கு அனுப்பப்பட்ட கிறிஸ்து, தமது திருத்தூதர்கள் வழியாக, அவரது வழிவருகிறவர்களான ஆயர்களை ஏற்படுத்தியுள்ளார், அவர்கள் அவரது நேர்ந்தளிப்பிலும் எய்துபணியிலும் பங்காளிகளாக இருக்கின்றனர்; மேலும் இவர்கள், தங்களது திருப்பணி அலுவலைத் திருச்சபையின் வேறுபட்டப் படிநிலைகளில் உள்ள பல்வேறு உறுப்பினர்களிடம் ஒப்படைக்கின்றனர்.’ ‘ஆயரின் திருப்பணி செயல்பாடு கீழ்மட்டப் படிநிலையில் உள்ள குருக்களிடம் கையளிக்கப்படுகிறது, அதனால் அவர்கள் குருத்துவ நிலையில் நியமிக்கப்பட்டு, கிறிஸ்துவால் ஒப்படைக்கப்பட்ட திருத்தூதரிய எய்துபணியின் சரியான நிறைவேற்றத்தில் ஆயர்த்துவ நிலையின் உடனுழைப்பாளர்களாக இருக்கின்றனர்.’’’

3. *உலகின் ஒளி*, 28: ‘‘குருக்கள், குருத்துவத்தின் உயர்ந்தப் படிநிலையைக் கொண்டிரா விட்டாலும், தங்கள் அதிகாரத்தைச் செயலாக்குவதில் அவர்கள் ஆயரைச் சார்ந்திருந்தாலும், அருள்பணித்துவ மாண்பில் அவர்கள் ஆயர்களோடு ஒன்றித்திருக்கின்றனர். திருநிலைகள் அருளடையாளத்தின் அதிகாரத்தால், நித்தியத் தலைமை குருவான கிறிஸ்துவின் உருவில், நற்செய்தி போதிக்கவும், விசுவாசிகளை வழிநடத்தவும், இறை வழிபாட்டைக் கொண்டாடவும் அவர்கள் திருப்பொழிவு செய்யப்பட்டுள்ளனர், அதனால் புதிய ஏற்பாட்டின் உண்மை குருக்களாக இருக்கின்றனர். தங்கள் திருப்பணி மட்டத்தில், கிறிஸ்துவின் ஒரே இடையாளர் பணியில் பங்கேற்கிறவர்களாக, அவர்கள் இறைவார்த்தையை எல்லாருக்கும் அறிவிக்கின்றனர். சிறப்பாக நற்கருணை வழிபாட்டில் அல்லது திருப்பலி கொண்டாட்டத்தில் அவர்கள் தங்களது புனிதப் பணியை செயலாக்குகின்றனர், அதில் கிறிஸ்து என்ற நபரில் செயல்பட்டு, அவரது மறைபொருளை அறிவிக்கிறதில், விசுவாசிகளின் மன்றாட்டை தங்கள் தலைவரின் பலியில் அவர்கள் ஒன்றிணைத்து, கிறிஸ்து தம்மையே மாசுமருவற்றப் பலியாக ஒரேமுறை தந்தைக்கு செலுத்திய புதிய ஏற்பாட்டின் ஒரே பலியை, ஆண்டவரின் வருகை வரையிலும் திருப்பலியின் பலியில் புதுப்பிக்கின்றனர். விசுவாசிகள் நடுவே நோயுற்றோர் மற்றும் பாவிகளுக்காக, துயர்நீக்கு மற்றும் ஒப்புரவு திருப்பணியை அவர்கள் செயலாக்குகின்றனர், விசுவாசிகளின் தேவைகள் மற்றும் செபங்களை தந்தையாம் கடவுளுக்கு அவர்கள் செலுத்துகின்றனர். ஆயரும் தலைவருமான கிறிஸ்துவின் பணியில் தங்கள் அதிகார வரம்புக்குள் செயல்பட்டு, கடவுளின் குடும்பத்தை ஒரே மனம் கொண்ட சகோதரத்துவத்தில் ஒன்றுசேர்க்கின்றனர், அவர்களை ஆவியாரில், கிறிஸ்து வழியாக, தந்தையாம் கடவுளிடம் இட்டுச் செல்கின்றனர். அவர்கள் இந்த மந்தை நடுவே அவரை ஆவியிலும் உண்மையிலும் ஆராதிக்கின்றனர்.

இறுதியாக, வார்த்தை மற்றும் கோட்பாட்டுக்காக உழைக்கின்றனர், கடவுளின் சட்டத்தில் தாங்கள் வாசித்து தியானிக்கிறதை நம்பி, தாங்கள் நம்புவதைக் கற்பித்து, தாங்கள் கற்பித்ததை தங்கள் வாழ்வில் செயலாக்குகின்றனர்.''

4. கத்தோலிக்கத் திருச்சபையின் லத்தீன் ரீதியில் உள்ள குருக்கள் மணத்துறவில் இருக்க வேண்டும், இருந்தாலும் சில தருணங்களில் வழமைமீறிய காரணத்திற்காக திருமணமான ஒரு மனிதரை குருவாகத் திருநிலைப்படுத்த ஆயருக்குத் திருத்தந்தை விலக்கீடு வழங்கலாம்.

5. ஒரு குரு வழக்கமானச் சொற்களில் ''தந்தை'' என்று அழைக்கப்படுகிறார், எழுத்தில் தலப் வழக்கிற்கு ஏற்ப மரியாதைக் குறிப்போடு சுட்டப்படுகின்றனர் (''அருள்தந்தை'', ''அருள்திரு'').

6. ஒரு குருவால் திருமுழுக்கு மற்றும் (ஆயர் அனுமதிக்கும் பொழுது) உறுதிபூதல் வழங்க, (திருமண மற்றும் இறுதிச்சடங்கு திருப்பலிகள் உள்பட) திருப்பலி நிறைவேற்ற, ஒப்புரவு மற்றும் நோயில்பூசுதல் வழங்க இயலும். ஆசிவழங்கல் சடங்கில் ஆயருக்கு உரியதைத் தவிர, மக்கள், பொருள்கள், மற்றும் இடங்களுக்கு அவர் ஆசி வழங்கலாம்.

7. மலேசியாவில், குருக்கள் வழக்கமாக திருச்சபையின் முழுநேரச் சேவையில் இருக்கின்றனர், அவர்களில் பலரும் பங்குதளங்களில் பணியாற்றுகின்றனர். மற்றச் சில நாடுகளில், தல ஆயரிடம் இருந்து வருவாய் பெறாமல், ஒரு குரு வேறுபட்டத் தொழிலும் செய்யலாம்.

8. திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில், ஒரு குரு நீளங்கி, திருப்பட்டை மற்றும் திருவுடையை அணிந்திருக்கிறார். திருப்பலி அல்லாதத் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் அவர் சூழணிகையும் பயன்படுத்தலாம்.

9. திருவழிபாட்டுச் சூழமைவுகளுக்கு வெளியே, அருள்பணியாளர்கள் எல்லா நேரங்களிலும் அருள்பணி உடைகளை அணிந்திருக்கிறதைத் திருச்சபை சட்டம் கடமையாக்கியுள்ளது (சட்டம் 284). அது உரிமையும் கடமையும் ஆகும். (மலேசியாவில் அருள்பணி உடைகளை அணிந்திருக்கிறது கட்டாயமில்லை என்றத் தல வழக்கம் உருவாகியுள்ளது.)

10. மிகவும் தூய வாழ்வு வாழ்ந்த குருக்களின் பல எடுத்துக்காட்டுகளை வரலாறு காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, ஒவ்வோர் ஆகஸ்ட் 4ல் விழா கொண்டாடப்படும் புனித ஜான் வியான்னியைக் கொள்ளலாம். அவர் குருக்களின் புரவலராக திருச்சபையால் உய்த்துணரப் பெறுகின்றார்.

கூரே தார்ஸ் (ஆர்ஸை நலமாக்கியவர்) என்று அறியப்படும் ஜான் வியான்னி, 1786 மே 8ந்தேதி, பிரான்ஸ் நாட்டில் லியோனுக்கு அருகே டார்டிலியில், விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். அவர் 1815ல் குருவாகத் திருநிலைப்பாடு பெற்று, எக்குலியில் துணை குருவானார். 1818ல் அவர் ஆர்ஸில் இருந்த பிரெஞ்சு குழுமத்துக்கு பங்கு குருவாக அனுப்பப்பட்டார்.

ஆர்ஸ் பகுதிக்கு வந்ததும், தமது பங்குமக்களின் மனந்திரும்பலுக்காக இக்குரு உடனடியாக செபிக்கவும் உழைக்கவும் தொடங்கினார். மேய்ப்பராகத் தமது எய்துபணிக்கு அவர் தம்மைத் தகுதியற்றவராகக் கண்டாலும், அவர் மக்களுக்குப் பணியாற்றுமாறு கடவுளின் அன்பால் ஆட்கொள்ளப்படத் தம்மையே அனுமதித்தார்.

வியான்னி தமது செபத்தாலும் தமது சாட்சிய வாழ்வாலும், அந்தக் குழுமத்தின் விசுவாசம் மெதுவாகப் புத்துயிர் பெற உதவினார். கடவுளின் இரக்கம் மற்றும் அன்பு பற்றி ஆற்றல்மிகு மறையுரைகளை வழங்கினார், கடினமான பாவிகளும் அவற்றைக் கேட்டு மனந்திரும்பியதாகக் கூறப்படுகிறது. அதனோடு, அவர் தமது ஆலயத்தைப் புதுப்பித்தார், ''லா ப்ரொவிதென்சே'' என்ற காப்பகத்தை உருவாக்கினார், மேலும் ஏழைகளிடம் அக்கறை காட்டினார்.

ஓர் ஒப்புரவாளராக அவரது புகழ் விரைந்து பரவியது, அவரிடம் ஒப்புரவு அருளடையாளம் பெறுவதற்காக பிரான்ஸ் முழுவதிலும் இருந்து திருப்பயணிகள் வந்தனர். மக்களின் மனமாற்றத்திற்காகத் தம்மை உறுதியாக அர்ப்பணித்திருந்த அவர், ஒவ்வொரு நாளும் 16 மணி நேரம் ஒப்புரவு அருளடையாளம் வழங்குவதில் செலவிட்டார்.

பல சோதனைகளாலும் அலகையாலும் துன்புற்றாலும், புனித ஜான் வியான்னி தமது விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருந்து, கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழ்ந்தார். பேறுநிறை

(நற்கருணை) அருளடையாளத்துக்கு தம்மை அர்ப்பணித்து, அதிக நேரத்தை செபத்திலும் ஒறுத்தலிலும் செலவிட்டார். அவர் மாறாத தாழ்ச்சி, கனிவு, பொறுமை, மற்றும் மகிழ்ச்சியோடு, சிறிதே உண்டு, சிறிதே உறங்கி, தமது 70கள் (73ஆம் வயது) வரை ஓய்வின்றி உழைத்து வாழ்ந்தார்.

ஜான் வியான்னி 1859 ஆகஸ்ட் 4ந்தேதி இறந்தார். அவரது இறுதிச் சடங்கில் மறைமாவட்ட ஆயர் மற்றும் குருக்கள் உள்பட, அவரது வாழ்வை குருத்துவத் தூயநிலையின் மாதிரியாகக் கண்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர்.

தூய கூரே தார்ஸ் (ஜான் வியான்னி) திருத்தந்தை 11ம் பயஸால் 1925ல் புனிதராக அறிவிக்கப்பட்டார். அவர் குருக்களின் புரவலராக இருக்கிறார். அவரது தூய வாழ்வின் நினைவாக ஒவ்வோர் ஆண்டும் நான்கரை லட்சத்திற்கு (450,000) அதிகமானத் திருப்பயணிகள் ஆர்ஸுக்குப் பயணிக்கின்றனர். 2009ல், திருத்தந்தை 16ம் பெனடிக்ட், புனித ஜான் வியான்னியின் இறப்பின் 150ஆம் ஆண்டை நினைவுகூரும் விதமாக, குருக்கள் ஆண்டை அறிவித்தார். திருத்தந்தை அருள்பணியாளர்களுக்கு ஒரு மடல் எழுதி, ஒருவரது குருத்துவ அழைப்பின் அர்ப்பணத்துக்கு எடுத்துக்காட்டாக எல்லா குருக்களும் கூரே தார்ஸை நோக்கிட ஊக்குவித்தார்.

(Taken from https://www.catholicnewsagency.com/saint/st-john-mary-vianney-322)